

# பல மாடிக் கட்டட அமைப்பில் பள்ளிக்கூடத் திட்டம்

## இந்த ஆண்டு செயல்படுத்தப்படும்



புத்ராஜெயா, மார்ச் 22-

பல மாடிக் கட்டடப் பள்ளிக்கூட முன்னோடித் திட்டம் புத்ராஜெயா, பினாங்கு, கோலாலம்பூரில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சின் அறிக்கை ஒன்று கூறியது. தனியார்துறை வியூகத்தின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

அதிக மக்கள் தொகை வாழும் பகுதிகளில் இருக்கும் பள்ளிக்கூடங்களிலும் மற்ற பள்ளிக்கூடங்களிலும் நெரிசல் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு இந்தத் திட்டம் கொண்டு வரப்படுகிறது என்றும் அமைச்சின் அறிக்கை குறிப்பிட்டது. இந்தத் திட்டத்தின் வாயிலாக செலவுத் தொகையைக் குறைக்க முடியும்.

அதேசமயம் மாணவர்களுக்கு மிகச்சிறந்த கல்விக் கட்டமைப்பு வசதிகளையும் செய்து தர முடியும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டது.

தலைநகர் கோலாலம்பூரில் 10 முதல் 17 மாடிகளைக் கொண்ட இரண்டு புளோக்குகள் கொண்ட பள்ளிக்கூடக் கட்டடத்தை நிர்மாணிக்கும் உத்தேசத் திட்டத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் கொண்டிருக்கிறது.

நிலத் தேவையை நிறைவு செய்வதற்கும் தலைநகரில் மக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதைச் சமாளிப்பதற்கும் இந்த உத்தேசத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று பிரதமர்துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

வளர்ச்சி கண்ட நாடுகளில் ஏற்கெனவே இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை ஒரு வழிகாட்டியாகக் கொண்டு இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த கல்வி அமைச்சுடன் கோலாலம்பூர் மாநகர் மன்றம் பேச்சு நடத்தும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் கல்வி அமைச்சு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தி இருப்பதாகவும் கல்வி அமைச்சு தனது அறிக்கையில் குறிப்பிட்டது.

வியாழக்கிழமை உயர் கல்வி அமைச்சுடன் நடத்திய கூட்டத்திற்குத் தலைமையேற்றபோது பிரதமர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

பள்ளிக்கூடங்களின் கல்வி நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஏஜெண்டுகளாக ஆசிரியர்கள் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு மட்டத்திலும் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான திட்டங்கள் பற்றி அன்வார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற கூட்டத்தில் விவரித்திருக்கிறார்.

